# விளம்பரம்™

**VLAMBARAM™**

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி 09 - பாலம் 07 APRIL 01, 1999



**வீடு விற்பது, வாங்குவது**

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று.
எனவே இவை பற்றி பூரணமான இலவச
ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் RE/MAX Crossroads Rlty Inc. sales rep

நம்பிக்கை ▲ நேர்மை ▲ திறமை



- விண்வெளி ஒரு அறிவியற்பகுதியாகுமா? (பக்கம் 9)
- ஆண்மையை அதிகரிக்க-பெண்மையை மேலோங்க..(பக்கம் 4)
- பழைய வாகனங்கள் வாங்குபவர்களின் கவனத்திற்கு (பக். 3)
- உயிரைக் காக்கும் அற்புதமான கருவி (பக். 2)
- இரத்த அழுத்தத்தை எவ்வாறு கணிப்பது? (பக்கம் 5)
- தலையில்லாமல் உயிர்வாழும் பூச்சி? (பக். 12)
- உலக கிரிக்கெட் போட்டிகள் (பக்கம் 6)
- அத்தாட்சி பத்திரமில்லாம் கார் ஓட்டுபவர்களிற்கு (பக். 10)




அனைவருக்கும்
இன்பம் பொங்கும்
இனிய நல் சித்திரைப்
புத்தாண்டு வாழ்த்துக்கள்!


**SABONA & Gift**

"முடி உதிரும் தொல்லை இனி இங்கு இல்லை
"எவமாட்டின்" சகல
கலைமகள் புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

3238 Eglinton Ave. E. Scarborough, Ont. M1J 2H6
(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)


## ஈழத்துச் சிவயோக சுவாமிகள் அருளிய மணிமொழிகள்

- வடதிசை காட்டும் கருவியைப் போல் இருக்க வேண்டும்
- நீயே உனக்கு நண்பனும் பகைவனும்
- வேலையைச் செய்தும் செய்யாதவன் போலிருக்க வேண்டும்.
- பிராணனை அடக்கி ஆளுதல் வேண்டும்
- சுகமுந் துக்கமும் இரட்டைப் பிள்ளைகள்
- பிரமச்சரிய விரதத்தின் பெருமை பெரிது.
- காலையிலும் மாலையிலும் தியானஞ் செய்தல் வேண்டும்.
- எல்லாவற்றையும் மிதமாகச் செயதல் வேண்டும்
- விடயங்களிலே போகும் மனத்தை ஆத்மாவில் இயலிக்கச் செய்தல் வேண்டும்.
- பற்றின்றிக் கருமத்தைச் செய்தால் அதுவே யோகம் அதுவே சந்நியாசமும் ஆகும்.
- மனத்தை அங்குமிங்கு அலையவிடாமல் எங்கும் பிரமசொரூபமாகப் பார்த்தல் வேண்டும்.

## சிந்தனைத் துளிகள்

நாம் 90 சதவீதம் பேசுகின்றோம். 10 சதவீதம்தான் கேட்கின்றோம். இது உண்மை என விஞ்ஞான ரீதியாகக் கண்டு பிடித்துள்ளார்கள். இது ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மை. மனித உறவுகளில் வரும் விரிசலிற்கு இதுவே மூலகாரணம். இறைவன் படைத்த இந்த எண்சாண் உடம்பில் இரு காதுகளையும் ஒரு வாயையும் மறந்து நாம் எமது அறிவிலித் தன்மையால் தேவையில்லாதவைகளை பேசுகின்றோம். சொல்லாத சொல்லிற்கு நாம் ராஜாவாகவும் சொல்லிய சொல்லிற்கு நாம் அடிமையாகவும் வாழ்கின்றோம். பல குடும்பங்கள் வாழ, உங்கள் குடும்பங்கள் வாழ, மற்றவர்கள் குடும்பங்கள் வாழ்வதற்காவது தேவையற்ற பேச்சை குறைப்பது நல்லது. இருப்பது இலவச தொலைபேசி என்பதால் சேர்ந்து இருக்கும் குடும்பத்தை தொலைத் தொடர்புக்கு மாற்றுவது தேவையற்ற பேச்சே. ஒருவரிற்கு ஒரு உதவி செய்வதிலும் பார்க்க, அவரிற்கு ஒரு இடையூறு இல்லாமல் இருப்பதே சிறந்தது ஆகும். நாலும் இரண்டும் ஆறு என்று தெரியாவிட்டாலும் ஏழு என்று சொல்வதுவே பிழையானதாகும்.

*சிந்தித்தால் தெளிவுவரும்.....*

## உன்னை அறிந்தால்........

21 ஆலோசனைகள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

19. துணிவுடனும் உற்சாகத்துடனும் இருங்கள். உங்கள் வாழ்க்கையை திரும்பிப்பார்த்தால் செய்தவற்றைவிட செய்யாத விடயங்களிலேயே கூடுதலாக வருத்தப்படுவீர்கள்.
20. நீங்கள் அன்பு செலுத்துபவர்களில் மிகுந்த அக்கறை எடுங்கள்.
21. உங்களது தயாரைப் பெருமைப்படுத்தாத எந்த விடயத்தையும் செய்யாதீர்கள்; உங்களிற்கு நன்மைவரும் என்பதற்காக, மற்றவர்களின் நின்மதியை தொலைக்க காரணமாக இருக்காதீர்கள்.

*- நன்றி:Mr. H.J. Brown, Jr.* *- தொகுப்பு: அருண்*




SINGAPORE CELLULAR
Bell Mobility
$50.+Tax per Month
CANTEL
மாலை 7 மணி தொடக்கம்
காலை 7 மணி மட்டும் இலவசம் (FREE)
வெள்ளி மாலை 7 மணி தொடக்கம்
திங்கள் காலை 7மணி மட்டும் இலவசம் (FREE)
175 min FREE (Month) Add. 20 cents only
Additional every Min. 20 சதம் மட்டுமே
Mobile Message, Call Forwarding FREE
Call Display, Call Waiting FREE, Per Second Billing
For more Information: சத்தி (416) 745-2378
Hotline: (416) 980-1234

**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

**சிவாகம கிரியா பீடம்**

☎: (416) 724-7480



திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.

# அறிவும் ஆக்கமும் (31)



*- விஜே குலத்துங்கம்*

அண்மையில் செய்திகளில் அடிக்கடி பலர் காபன் மொனொக்சைட்டின் (Carbon Monoxide -CO) இனால் மரணமடைவதாகக் கேள்விப்படுகின்றோம். இப்படி பல மரணங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஒன்ராரியோவில் கட்டாயமாக எல்லா வீடுகளிலும் காபன் மொனாக்சைட்டுவை கண்டு பிடிக்கும் Alarm களை கட்டாயம் இருக்க வேண்டுமென்ற சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தது. அப்படியிருந்தும் பல வீடுகளில் இந்த Carbon Monoxide Alarm இன்னமும் பொருத்தப்படவில்லை என தெரிய வருகின்றது. இதனால் இந்த காபன் மொனொக்சைட்டு என்றால் என்ன? அதன் இயல்புகள் என்ன என்பதை அறிந்திருத்தல் மிகவும் அவசியம்.

Carbon Monoxide - (CO) காபன் மொனொக்சைட்டு ஒரு நிறம் அற்ற, மணம் அற்ற நச்சு வாயுவாகும். அத்துடன் நீங்கள் அறியாதவாறே உங்களை கொன்று விடும். இதற்கு உதாரணமாக சில வருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு விபத்தைப் பற்றிக் குறிப்பிடலாம். கனடாவிற்கு புதியவர்களான இரண்டு இந்தியர்கள் புதுமனைகள் கட்டப்படும் ஒரு வேலைத் தளத்தில் காவல் அதிகாரிகளாக பணிபுரிந்து வந்தனர். ஒரு winter குளிர் நாளில் வெளியில் குளிராக இருந்ததால் கட்டப்பட்ட ஒரு வீட்டின் Garage இனுள் மோட்டார் வண்டியை நிறுத்திவிட்டு கராஜ் இன் கதவையும் மூடிவிட்டார்கள். குளிருக்காக மோட்டார் வண்டியையும் இயங்கச் செய்து, Heater ஐப் போட்டு விட்டு நித்திரை கொண்டு விட்டார்கள். மோட்டார் வண்டி என்ஜின் புகையில், வெளிப்பட்ட காபன் மொனொக்சைட்டு Garage இனுள் நிரம்பி அதை இவர்கள் சுவாசித்து இவர்கள் இரத்தத்தினுள் சேர்ந்து, நித்திரையிலேயே அவர்கள் இறந்து விட்டார்கள். எனவே பாதிப்படைபவர்களுக்கு தெரியாமலேயே இந்த நச்சு வாயு அவர்களை அழித்துவிடும்.

இரத்தத்திலுள்ள கீமோகுளோபின் (Hemoglobin) நாங்கள் சுவாசிக்கும் பொழுது காற்றிலுள்ள ஒக்சிசனை கரைத்து இழையங்களுக்கு எடுத்துச் செல்லும். ஆனால் காபன்மொனொக்சைட் விரைவாக Hemoglobin இனுடன் சேர்ந்து ஒக்சிசனை அகற்றி விடுவதால் இழையங்களுக்கு ஒக்சிசன் கிடைக்காமல் போய்விடும். எனவே காற்றில் CO அதிகமாக இருக்கும் போது இரத்தத்தில் அதிகளவு சேர்ந்து காபொக்சிகீமோகுளோபின் (Carboxyhemoglobin) எனப்படும் நச்சுப் பதார்த்தம் தோற்றுவிக்கப்படுகின்றது. இந்தப் பதார்த்தம் முதலில் சாதாரன Flue போன்ற தலையிடி, தலைச் சுற்றல் போன்ற குணாதியங்களை தோற்றுவிக்கும். இதன் செறிவு கூட மயக்கமடைந்து, மூளை பாதிக்கப்பட்டு மரணம் நேரிடும்.

அண்மையில் தனியே வசிக்கும் ஒரு வயோதிபத் தம்பதியினர் வெளியில் போய்வந்து மோட்டார் வண்டியை Garage இனுள் நிறுத்திவிட்டு, என்ஜினை நிற்பாட்ட மறந்து வீட்டினுள் சென்று நித்திரைக்குப் போய்விட்டார்கள். கராஜ், வீட்டுடன் சேர்ந்து இருந்ததால் CO படிப்படியாக வீட்டினுள் சென்று அவர்களை நித்திரையிலேயே இறக்கச் செய்தது.

வீட்டினுள் இந்த COஎங்கிருந்து வருகின்றது? எண்ணெய், gas போன்றவை எரியும் போது உருவாகின்றது. வீட்டிலுள்ள Heater, Fireplace, Gas உபயோகிக்கும் Dryersஆகியவற்றிலிருந்து இது வெளிப்படலாம். சாதாரணமாக இந்த உபகரணங்களிலிருந்து காற்று, வெளிப்போக்கி மூலம் CO வெளியே அகற்றப்படும். ஆனால் வெளிப்போக்கிகளின் வழிகள் அடைப்பால் அல்லது Furnace, Heater போன்றவற்றில் வெடிப்பு ஏற்பட்டால் இந்த Co வீட்டினுள்ளேயே வெளிப்பட இடமுண்டு. குளிர்காலத்தில் கதவு, ஜன்னல்கள் எல்லாம் மூடப்பட்டுள்ளதால் மேலும் அபாயம் கூடுகின்றது. Fireplace பாவிப்பவர்கள் வீட்டில் Chimney யில் காபன் படிவதாலும், பறவைகள், வேறு Rakoon போன்ற பிராணிகள் கூடு கட்டுவதாலும் அடைபட்டு போவதால் CO அபாயம் ஏற்படும்.

Furnace ல் இருந்து செல்லும் வெளிப்போக்கி வீட்டிற்கு வெளிப்பக்கத்தில் சுவர் ஓரமாக காணப்படும். சென்ற ஜனவரி மாதத்தைப் போன்று அதிகளவு Snow விழுமாயின் இந்த வெளிப்போக்கிகள் Snow வால் மூடப்பட்டும் இருக்கலாம்.

இந்த CO அபாயத்திலிருந்து எம்மை பாதுகாக்க Carbon Monoxide Alarm ஒன்றை வீட்டினுள் பொருத்துவது மிகமிக அவசியம். Fire Alarm ஐப் போல, CO வின் அளவு கூடும்பொழுது அலாரம் ஒலிக்கும். ஆனால் இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் அலாரம் ஒலிக்கும் பொழுதும் எங்களால் CO வை உணர முடியாது. இதனால் Alarm ஐ அலட்சியப் படுத்த இடமுண்டு. யாருக்காவது வித்தியாசமான அறிகுறி ஏற்பட்டால் உடனே வீட்டை விட்டு வெளியேறி 911 ஐ அழைக்க வேண்டும். அப்படியான அறிகுறி ஏதும் இல்லாவிட்டால் உடனடியாக எல்லா சாதனங்களையும் நிறுத்திவிட்டு கதவு, ஜன்னல்கள் எல்லாவற்றையும் திறந்து விட்டு உடனடியாக ஒரு தராதரம் பெற்ற தொழில்நுட்பவியலாளரை அழைத்து வீட்டை சோதிக்க வேண்டும்.

CO Alarm வாங்கும்பொழுது மலிவான Alarm ஐ வாங்காது அங்கீகாரம் வழங்கப்பட்ட சிறந்த உற்பத்தியாளர்களால் செய்யப்பட்ட Alarm வாங்குதல் வேண்டும். இந்த Alarm ஐ படுக்கை அறைக்கு அண்மையிலுள்ள Hallway ல் பொருத்த வேண்டும். ஆதாவது Alarm ஒலி கேட்க எழுந்திருக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அத்துடன் எரியும் சாதனங்களிலிருந்து குறைந்தது 15 அடி தூரத்தில் அமைக்க வேண்டும். CO மிகவும் இலகுவாக பரவுவதால் எந்த இடத்தில் இதனைப் பொருத்தினாலும் நன்கு தொழிற்படும். எனவே அவசியம் வீட்டிற்கு ஒன்றாவது, மேலும் ஒவ்வொரு தளத்திற்கும் இவ்வொன்று இருந்தால் இன்னும் நல்லது. தொடர்மாடிக் கட்டிடத்தில் இருப்பவர்களும் தங்கள் இருப்பிடத்தில் ஒன்றை பொருத்துவது அவசியம்.

***********************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் -

*61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.*

புதிய நிர்வாகத்தின் கீழ்

**Markham / Sheppard** பகுதியில்

**NEW SPICELAND**

☎ : 292-0086

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 94

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | | ■ |
| | ■ | ■ | | ■ | ■ | | ■ |
| | ■ | ■ | 3 | | 4 | 5 | |
| 6 | | | | ■ | | ■ | |
| | ■ | ■ | ■ | 7 | | ■ | |
| 8 | | | 9 | | ■ | | 10 |
| | ■ | ■ | | ■ | ■ | ■ | |
| | 11 | ■ | | | | | 12 |

**இடமிருந்து - வலம்**

1. பூமியின் மத்தியில் செல்லும் கோடு
3. மலை
6. அணிகலன் ஒன்று
7. தமிழரின் உணவில் ஒன்று
8. இலட்சியம்
10. பெண் (வல-இட)
11. தன்மைப் பன்மைச் சொல்(வல-இட)
12. செல்வம் மிக்கவள் (வல - இட)

**மேலிருந்து கீழ்**

1. தமிழீழத்தின் ஒரு ஊர்
2. குடிநீர் மருந்துக்கு உதவும் கொடி ஒன்று
4. ஒழுங்கு (கீழ் - மேல்)
5. சிறு வாய் உள்ள போத்தில்களை மூட உதவுவது (கீழ் - மேல்)
7. புயம்
9. மரம் வெட்ட உதவும்
12. மிகவும் திருப்தி (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் April 27, 99க்கு முன்னர் கிடைக்க வேண்டும். Address: P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ச | ப | ரி | ம | லை | ■ | சி | ஊ |
| ந் | ■ | ■ | ■ | ■ | எ | ரு | து |
| த | ற் | செ | ய | ல் | ■ | ■ | ப |
| ர் | ■ | ப | ■ | ன | ■ | ■ | த் |
| ப் | ■ | ■ | ■ | அ | ந் | தா | தி |
| ப | ரீ | ட் | சை | ■ | ■ | லா | ■ |
| ம் | ■ | ■ | ரி | ■ | வே | ட் | கை |
| ■ | க | டு | வ | ன் | ■ | டு | வ |

**#93இல் வெற்றி பெற்றோர்**

1)L. அருணன்,Donmills
2) Manimarn, North York


நியூ ஸ்பைஸ்லாண்ட்
5800 Sheppard Ave. E.
Unit#16 Scarborough, Ont.

அவித்து அரித்த மா **1lb .53¢ 40 lb** மேல் **Free Delivery**
கொத்து ரொட்டிக்குரிய ரொட்டி
**Patty - Rolls - Cutlets - Puddings**
இடியப்ப **Machine**
மின் தேங்காய் துருவி
✆ (416) 288-8177
**E.Mail luxmy@gloimpex.com**
Special Discount for Take-out / Restaurant & Caterers

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing






Repairs
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] **285-4998**

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** (MIDLAND & LAWRENCE)



## OODAM MAINTENANCE WORKS


Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING
*>Railing > Fencing >Welding*

Free Estimates
Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## பழைய வாகனங்கள் வாங்கும் முன்னர் நீங்கள் கவனிக்க வேண்டியவை



உங்களுக்கு பழைய அல்லது பாவித்த வாகனங்கள் வாங்கும் முன்னர் கவனிக்க வேண்டிய சில விடயங்களை இங்கு தர உள்ளேன். பாவித்த வாகனங்களை வாங்கும் முன்னர் அவ் வாகனத்தினது வரலாற்றை தெரிந்து கொள்வதன் மூலம் உங்களை பல வழிகளில் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

1] விபத்துக்குள்ளான வாகனமா
2] எத்தனை பேர் அந்த வாகனத்தை பாவித்துள்ளார்கள்
3] உண்மையான km என்ன?

நீங்கள் ஒரு பாவித்த வாகனத்தின் (Vin Number) எடுத்துக் கொண்டு எந்த ஒரு சாரதி அனுமதிப்பத்திரம் எடுக்கும் அலுவலகத்திற்கும் சென்று Vin Number ஐயும் $20 கொடுத்தால் அந்த வாகனத்தின் வரலாறே உங்கள் கையில் சில நிமிடங்களில் அந்த வாகனம் எங்கு செய்யப்பட்டது, முதல் / தற்போது உள்ள நிலைமை, உங்களுக்கு முன்னால், இவ் வாகனம் விபத்துக்குள்ளாகி உள்ளதா, எத்தனை உரிமையாளர்கள் அதனை பாவித்துள்ளனர் என்பது மட்டும் அல்லாமல் அதன் உண்மையான km எவ்வளவு என்பதையும் உங்களால் அறிய முடிகிறது. இதன் மூலம் பல நன்மைகளை உங்களால் அடைய முடிகிறது.

பாவித்த வாகனங்களை வாங்க விரும்புவோருக்கு இன்னும் ஒரு விடயத்தை கட்டாயம சொல்ல விரும்புகிறேன். நீங்கள் $15,000 க்கு ஒரு பாவித்த வாகனத்தை வாங்கப்போகிறீர்கள் என்று வைத்துக் கொண்டால் அதற்கு GST +PST சேர்த்து அதற்கு $17,250 செலுத்தப் போகிறீர்கள். அதற்குரிய முழுத்தொகையையும் காசாக செலுத்தி அதை வாங்குபவர்கள் 1% மானவர்களே. 99% மானவர்கள் சிறிது தொகையை செலுத்தி மிகுதியை வங்கிகளிலோ அல்லது வாகனம் வாங்கும் நிறுவனங்களிலோ கடனாகப்பெற்று மாதாமாதம் கட்டுப்பணமாக செலுத்தி வருகின்றர்கள். இவ்விடயத்தில் நீங்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில், வங்கிகளோ வாகனத்தை நீங்கள் வாங்கும் நிறுவனங்களோ எவ்வளவு வட்டி வீதத்தை உங்களிடம் அறவிடுகிறது என்பதாகும். பாவித்த வாகனங்களுக்கான கடன் வட்டி வீதம் மிகமிக கூடுதலானது. ஆகவே அதையும் கருத்தில் கொள்ளும் போது அந்த வாகனத்திற்கு நீங்கள் மொத்தமாக செலுத்தப்போகும் தொகையோ மிகமிக அதிகமானது. அந்த தொகைக்கு நீங்கள் ஒரு புதிய வாகனத்தையே உங்களால் வாங்க முடியும். பலர் நினைப்பது புதிய வாகனங்களை வாங்கும் போது தாங்கள் ஏராளமான பணத்தை வரியாக செலுத்த வேண்டும் என்று தற்போது புதிய வாகனங்களுக்கு நல்ல வட்டிவீதத்தை (வங்கிகளில் கிடைக்காத) அந்த வாகனங்களின் தயாரிப்பாளர்கள் வழங்குகின்றனர். குறைந்த வட்டி வீதத்தில் வாங்கும் போது சில ஆயிரம் டொலர்களை உங்களால் சேமிக்கக் கூடியதாக உள்ளது. அது ஒரு பெரிய சேமிப்பு. பலர் தங்களின் Credit History நல்லதல்ல என்பதற்காக பழைய வாகனங்களை வாங்குகின்றனர். என்னால் உங்களுக்கு உதவ முடியும் என்று நம்புகிறேன்.

தொடர்புகளுக்கு:- சோதீஸ் வேலை:(416)364-1116 அல்லது Cell(416)704 -1179


*We are entering 8 th year service in Scarborough.*



**Better Work ... Less Money**

**N.T.E Auto Inc.**
New Trade Engineering
We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.


**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**

We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates


என். ரி. ஈ. ஓட்டோ இங்.

**AUTO INC.**
New Trade Engineering
151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎ (416) 750 - 1573
SIVABALAN






## TV & VCR




ALL MAKES- TV'S, VCR'S
CAMCORDERS, STEREOS
*MOST REPAIR DONE IN YOUR HOME*
FAST SERVICE



Pl Call.: **MAHENDRAN** B.Sc. Exp. Tech. **(416) 286-8990**



## ELECTRICAL REPAIRS



உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள்
றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த
செலவிலும்,சிறந்த முறையிலும்
குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ் - ☎ **261-6883**

# ஆரோக்கிய வாழ்வு (30)

- *N.* செல்வசோதி




**ஆண்மையை அதிகரிக்க செய்ய**
**பெண்மையை மேலோங்க வைக்க** **ஹலாசனம்**

இன்றைய இளைய தலைமுறையினருக்கு மத்தியிலுள்ள மிகவும் அந்தரங்கமான பிரச்சனை அவர்கள் தகாத முறையில் சில துர்ப்பழக்கங்களுக்கு ஆளாவதாலும், சுய இன்பத்தில் ஈடுபட்டு தமது சக்தியை விரயம் செய்வதாலும் தமது ஆண்மையை இளம் வயதிலேயே இழந்து விடுகின்றனர்.

அத்துடன் இவர்கள் திருமணம் செய்தபின் பூரணமான ஆண் பெண் இன்பத்தை அனுபவிக்க முடியாது அவதியுறுகின்றனர். பின் சில நாட்களில் மனவிரக்தியும் அடைகின்றனர். இதன் காரணமாக கணவன் மனைவி உறவில் கசப்பும் விரிசலும் ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட பிரச்சினையின் காரணம் வெளியாருக்கு தெரிவதில்லை.

இவ்வாறான தம்பதியினர் பால் உறவில் ஈடுபடும்போது கணவன் ஓரிரண்டு நிமிஷத்திலோ அல்லது ஒருசில வினாடிகளிலோ விந்து ஒழுகுதல் மூலம் தனது சக்தியை இழந்து விடுகிறான். இதனால் தனது மனைவியை திருப்திப்படுத்த முடியாது திண்டாடுகிறான். இந்த நேரத்தில் மருத்துவர்களை அணுகிப் பலனில்லை. எனவே மாத்திரைகளையும் சில ஆண்மையைத் தூண்டும் மருந்து வகைகளையும் உபயோகிக்க முனைகின்றனர். அதன் மூலம் தற்காலிகமாகத் திருப்திப்படுகின்றனர். அதன் பின் தமது உடலில் பாரதூரமான எதிர்விளைவு ஏற்படுவது அப்போது தெரிவதில்லை. இதன் மூலம் இளமையிலேயே முதுமையை அடைகின்றனர்.

இக்குறையை முற்றாகப் போக்குவதற்குத்தான் நம் முன்னோர்கள் நமக்களித்த யோகாசனப் பயிற்சி முறையில் ஹலாசனம் என்ற ஒரு உன்னதமான ஆசனமுறை இருக்கிறது. இதனைப் படத்தில் காட்டியபடி செய்யவும்.



1. தரையில் நேராக படுத்திருத்தல்
2. இடுப்பில் கைகளைப் பிடித்து உடம்பைத் தூக்குதல்
3. இடுப்பிலிருந்து கைகளை முதுக்கு ஆதரவாக கொாண்டு வருதல்
4. கால்கள் இரண்டும் தரைக்கு பின்புறமுள்ள தரையைத் தொடுதல்

இப் பயிற்சியை தினமும் 3 நிமிடங்களாவது செய்துவரும் போது

1. ஆண் உறுப்புக்கள் பலம் பெறுகிறது.
2. விந்து சக்தியை அதிகரிக்கச் செய்கிறது.
3. வீந்து தானாக ஒழுகுதல் கட்டுப்படுகின்றது.
4. இளமைத் துடிப்பு மேலோங்குகின்றது.

இது பெண்களுக்கும் பொருந்தும். அத்துடன் அறுபது வயதிலும் இருபது வயது இளஞரைப்போல இன்பத்தை அனுபவிக்க முடியும். இதனை என்னிடம் வந்து ஆலோசனை பெற்று பயிற்சி பெற்ற பலரிடம் பார்த்திருக்கிறேன்.


**யோகாசன வகுப்பு**

கனேடிய இலங்கை பட்டதாரிகள் சங்கத்தின் சார்பில் கடந்த 3 வருடங்களாக அனுபவமிக்க ஆசிரியரால் பிரதி ஞாயிறுதோறும் காலை 7:30 மணிக்கு Markham /Ellesmere இற்கு அருகாமையில் வோபன் கொலிஜியேற்றில் (Woburn Collegiate) நடாத்தப் பட்டு வருகின்றது.

மேலதிக தொடர்புகளிற்கு - சத்தி: **291-5853**

கிரகப் பொருத்தம் பார்த்தல்
ல
12
சுபமுகூர்த்தம் கணித்தல்

3 4

யோ
கா
சோ
தி
ட
ம்




(416) 299-8361

10 9

சாதகக் குறிப்பு கணித்தல்
6
எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல்
பலன் பார்த்தல்



**Neelam SILK**

வட அமெரிக்காவில் உயர்ந்தரப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

# நீலம் சில்க்

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 8வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும் நீலம்சில்க்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்



கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)

CALL: (416) 778- 7455
FAX: (416) 778-8484



**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12
Professional Photographer - கதிர்
☎: (416) 750-8118
2425 EGLINTON AV. E. UNIT 3
KENNEDY/ EGLINTON, SCARBOROUGH



Pillayar Traders

SRILANKAN . EAST & WEST INDIAN
GROCERIES & TEXTTILES
3630 LAWRENCE AV. E., SCARBORO
☎ : 438-7746


**விஷேச போட்டி இல. 83**

பூமி, அறிஞன், குழந்தை, நெருப்பு ஆகிய 4 சொற்களுக்கும் அச்சொற்களின் ஒத்த கருத்துக்கள் உடைய 4 சொற்களைத் தருக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| த | வு | க | ம | அ | கி | ல | ம் |
| ழ | ய் | சே | தை | க் | வி | ப | ய |
| ல் | ழ | அ | மே | கி | ழ | வி | ல |
| ன | நீ | கா | சி | னி | ச | ர் | வ |
| க | வி | பு | சு | ன் | ந் | ழ | கு |
| ற் | ஞா | ல | ம் | ண | தி | ரை | ழ |
| றோ | ன | வ | ல | பு | யு | தே | வி |
| ன் | றோ | ன் | சா | நி | பி. | ள் | ளை |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலை கீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம்கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளை April 12, 99 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**# 82ன் விடைகள்**

1. மலேசியா, மெக்சிகோ, பேரு, அல்ஜீரியா, சிலி, வெனுசுலா, சிம்பாவே, நைஜீரியா, எகிப்து, இலங்கை, இந்தியா, ஜமேக்கா


பரிசு பெற்றோர்:

1) ம. யோகநாதன், Toronto
2) ப. நிரஞ்சனி, N. York

**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக்கக் கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது)
**விதிகள்:** ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம்.பிள்ளையார் ரேடர்ஸ்,விளம்பரம் ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.

# இதயம் ஒரு இயந்திரம்

-ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி, பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்



**முக்கிய கவனிப்பு**

இதயம் பலவீனமாக இருக்கிறது; நோய் ஏற்பட்டுவிட்டது என்று அறிந்துகொள்ளும் போது சிலர் மிகவும் அதிர்ச்சியடைவார்கள். ஆயினும், மனத்தைத் திட்டப்படுத்திக் கொள்ள வேண்டும். நோயின் நிலைமைக்குத் தக்கவாறு வாழ்க்கை முறையிலும் பழக்க வழக்கங்களில் அனுபவங்களிலும் அவசியமான மாறுதல்களைச் செய்து கொண்டு வேலையில் மீண்டும் ஈடுபடவேண்டும். எப்பொழுதும் நோயைப் பற்றியே எண்ணிக் கொண்டிருத்தலும் கவலைப்படுதலும் இதயம் நின்றுவிடுமோ என்று நினைப்பதும் கெடுதி செய்யும். அவை நோய் குணமாவதைத் தாமதப்படுத்தும்; மன அமைதியை அழிக்கும். இருதய நோயுள்ளவர்கள் நிதர்சனமாக வாழவேண்டும். அளவாக, அதிகக் களைப்படையாமல் இருக்கும்படி வேலை செய்தால்; அது அவர் ஆயுளை நீடிக்க வைக்கும். வேலை, ஓய்வு, பொழுதுபோக்கு ஆகிய மூன்றிலும் ஒவ்வொரு நாளும் போதிய அளவு கவனம் செய்ய வேண்டும். இருதய நோயுள்ளவர்கள் மாலை வேளைகளில் நன்றாக உலவும் பயிற்சியைக் கொள்ளலாம்.

நம் ஒவ்வொருவருக்கும் ஓரளவு இயற்கையான இரத்த அமுக்கம் இருக்கும். இரத்த அமுக்கம் என்றால் இரத்தக் குழாய்களில் சுவர்களில் அமுக்கும் அமுக்கமாகும். இந்த அமுக்கம் இயற்கையான அளவினின்றும் மாறுபடுவது, இரத்தக் குழாய்களின் நிலைமையையும் அவைகளில் உள்ள இரத்தத்தின் அளவையும் இருதயத் துடிப்பின் பலத்தையும் பொறுத்தது.

நமது இரத்தக் குழாய்களின் சுவர்கள் இரண்டு வகையான நார்களால் ஆனவை என்று, (மீள் சத்திநார்கள், மற்றது தசைநார்கள்.) இருதயம் சுருங்கி இரத்தத்தை அழுத்தித் தண்ணீர்ப் பம்புபோல அதைக் குழாய்க்குள் செலுத்துகையில் மீள்சத்திநார்கள் நீள்கின்றன. இருதயத் துடிப்பு வேகம் அடங்கினதும், அவை சுருங்குகின்றன. இப்படி மாறிமாறி நீண்டும் சுருங்கியும் அவை இரத்தத்தை ஓயாது அமுக்கிக் கொண்டே இருக்கின்றன. இருதயத்தின் ஒரு துடிப்புக்கும் அடுத்த துடிப்புக்கும் இடையில் இந்த அழுத்தத்தின் வலு படிப்படியாகக் குறையும், ஆனால் அடுத்த துடிப்பு துவங்கினவுடன், அது மறுபடியும் அதிகப்படும். இருதயத் துடிப்புச் சமயத்திலே ஏற்படும் அழுத்தம் குலை சுருக்க அழுத்தம் (Systolic Pressure) என்றும் அது விரியும் போது உள்ளது குலை விரிவு அழுத்தம் (Diastolic Pressure) என்றும் பெயர் பெறும்.

இரத்த அழுத்தம் பார்க்கும் கருவியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். டாக்டர் அதை உங்கள் கையிலே சுற்றி வைத்துக் காற்று அடிப்பார். பலூனிலே காற்று ஏறஏற அது பருத்து புய நாடியைப் பலமாக அழுத்தி அதன் வழியாக இரத்தம் ஓடமுடியாதவாறு செய்துவிடும். பிறகு டாக்கர் காற்றைச் சிறிது சிறிதாக வெளியே விட்டுக் குலைச் சோதினியால் கவனித்துக் கேட்பார். திடீரென்று இரத்தம் பாய்ந்து வரும் ஓசை கேட்கும். அப்போது பாதரசம் காட்டும் இலக்கத்தை டாக்டர் குறித்துக்கொள்வார். அது சாதாரணமாக 110க்கும் 150க்கும் இடையிலே இருக்கும். இது குலைச்சுருக்க அழுத்தம்.

டாக்கர் தொடர்ந்து காற்றை விடவிட சிறிது நேரத்தில் இரத்தம் ஓடுகிற சத்தம் கேட்காது; அப்போது பாதரசமட்டம் அநேகமாக 80க்கும் 95க்கும் இடையிலே இறங்கியிருக்கும் இது குலை விரிவு அழுத்தமாகும். உங்களுக்கு முதலிலே கூறிய அழுத்தம் 120 என்றும் பின்னால் சொன்னது 80 என்றும் வைத்துக் கொள்வோம். டாக்கர் அதை 120/80 என்று எழுதுவார். அதாவது உங்கள் இருதயம் துடிக்கும் போது பாதரசத்தை 120 மில்லி மீட்டர் (ஏறக்குறைய 4-5 அங்குலம்) உயர்த்தக்கூடிய அளவு அழுத்தம் ஏற்படுகிறது. (தொடரும்)




**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**


குடிவரவுச் சட்டம்
**Immigration Law**

குற்றவியல் சட்டம்
**Criminal Law**

குற்றவியல் தண்டனை பெறுவதனால்....



உங்கள் வதிவிட உரிமை
- Permanent Resident
குடியுரிமை
- Citizenship
குடும்ப ஒன்றிணைவு
- Family Sponsorship
பாதிக்கப்படலாம்.



வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?

அடுத்து செய்யவேண்டியது என்ன?



முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்...

**பின் இவரை அழையுங்கள்...**

எஸ்.கே. தீசன்
(416) 631-6322



**YARLCAN**
**STEAM CLEANING**

உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்





**மோகன்**
Tel: 724-9085
Pager : 600 0335
Cell.: 721-9709



**AIRPORT SERVICE & MOVING VAN**



ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய் வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு

☎: (416) 759-0557


## நினைவில் நிலைத்து நிற்கவேண்டியவை

1. உலகில் முதன்முதல் இருதய மாற்றீடு (Heart Transplan) செய்தவர் யார்?
   கிறிஸ்றியன் பனாட் (Christial Barnard)
2. கனடாவின் நிதி அமைச்சர் யார்?
   போல் மாற்றின் (Paul Martin)
3. முதன்முதலில் விண்வெளிக்கு செய்மதியை (First Satellite) அனுப்பி விண்வெளி சகாப்தத்தை (Space Age) ஆரம்பித்த நாடு எது? எப்போது? செய்மதியின் பெயர் என்ன?
   ரஷ்ய ஒன்றியம் (U.S.S.R), 1957ல்
   ஸ்புற்னிக் ஒன்று (Sputnik I )
4. உலகில் தன்னாட்சியுடைய மிகச் சிறிய குடியரசு (Republic) எது? நொவ்று (Nauru)
5. சோக்கிரட்டீஸ் (Socrates) எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   கிரேக்க நாடு (Greece)
6. இவ்வருடம் யூன் 16 ஆம் நாளை (16, 06, 1999) ஏன் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதி (UNPF) நிறுவனம், உலக சனத்தொகை நாளாக தெரிவு செய்துள்ளது?
   இந்நாளில் உலக சனத்தொகை ஆறு பில்லியன்கள் ஆகும் (6 Billions) என எதிர்பார்க்கப்படுகிறது.
7. மரதன் ஓட்டம் எவ்வளவு தூரத்தைக் குறிக்கும்?
   26 மைல்கள் 385 யார்கள். (26 Miles 385 yds) / 42.195 கிலோ மீற்றர்கள் (42.195 kms)
8. தையல் இயந்திரத்தை (Sewing Machine) உருவாக்கியவர் யார்?
   ஐசேக் சிங்கர் (Issac Singer)
9. உலகில் அதிபெரிய மலர் (Flower) எது?
   றெவ்ளீசியா (Rafflesia)
10. உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் கூடிய முறைகள் கலந்து வெற்றி பெற்றநாட்டின் குழுவில் பங்கு பற்றிய ஒரே உதைபந்தாட்ட வீரர் யார்?
    பேலே (Pale) பிறேசில் (Brazil)

*-A. Arunthavarajah*


**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT**

தமிழில் இலவசஆலோசனை

**வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**

- ✲ தகுந்த ஆலோசனை
- ✲ சட்ட உரிமைகள்
- ✲ விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
- ✲ உரிய நஷ்டஈடு
- ✲ மற்றைய இழப்பீடு
- ✲ மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும், அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள

**ரவி நடராஜா** (12 வருட காலம் அனுபவமுள்ளவர்)

தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 245-6555
FAX: (416) 245-7766
2095 Weston Rd., #201 (South of HWY 401),
Toronto, Ont. M9N 1X7

# விளையாட்டுத் தகவல்கள் (27)

எஸ். கணேஷ்



## WORLD CUP-99 (CRICKET)

உலகத்தில் பல விளையாட்டுக்கள் இத்துறையில் இருந்தாலும் உலகத்தில் அதிக அளவு ரசிகர்களால் விரும்பப்படுவது உதைபந்தாட்டமும், கிரிகெட் ஆகிய இரு விளையாட்டுகளேயாகும். தேசிய மட்டத்தில் நாடுகளின் பெயரில் விளையாடுவதால் இவ் இரு விளையாட்டு துறைகளும் சிறப்படைகின்றன. அத்துடன் உதைபந்தாட்டம், கிரிக்கெட் துறைகள் மட்டுமே World Cup Finals நான்கு அல்லது 3 வருடங்களுக்கு ஒருமுறை ஆடப்படுகின்றன.

நம்நாட்டு மக்கள் அனைவரினாலும் விரும்பி ரசிக்கப்படுவது கிரிகெட் துறையாகும். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைக்குமாற் போல் 1996ம் ஆண்டு நடைபெற்ற World Cup இல் எமது நாட்டு அணி Srilanka தனது திறமையை உலகெங்கும் எடுத்தியம்பி World Champian ஆக வந்து தனது முத்திரையை பதித்தது. அதை தொடர்ந்து நடைபெற்ற பல போட்டிகளில் வெற்றிகளை ஈட்டி நம்மை ஒருவரும் அசைக்க முடியாது, நாம் தான் கிரிகெட் உலகில் ஜாம்பவான்கள் என்று நிரூபித்து வந்தது. "ஆனைக்கும் அடி சறுக்கும்" என்பதை போல் கடந்த இரு வருடங்களாக Srilanka அணி பல தோல்விகளை கண்டு வருகிறது. இவ்வருடம் 'World Cup 99' எமது நாட்டு அணிக்கு ஒரு சோதனைக் களமாகும், ஆனாலும இவ் ஆட்டங்களில் ஸ்ரீலங்கா தனது திறம்யை நிரூபிக்கும் என்று ரசிகர்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ் உலக கிண்ண போட்டிகளின் சரித்திரத்தை பின்னோக்கி பார்க்கும் போது 1912ஆம ஆண்டு அச் சமயம் Test ஆடும் நாடுகளான அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, சவுத ஆபிரிக்கா ஆகிய மூன்று நாடுகளுக்கிடையில் முதல் World Cup ஒழுங்கு செய்யப்பட்டது. துர்அதிஷ்டவசத்தால் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணங்களால் இவ் ஆட்டம் பின் போடப்பட்டு 1975 ம் ஆண்டிலேயே முதலாவது World Cup ஆட்டங்கள் நடைபெற்றன. முதலாவது World Cup இல் இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள், இந்தியா, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, கிழக்கு ஆபிரிக்கா என்பன கலந்து கொண்டன. இதுவரை (6) World Cup சுற்று போட்டிகள் நடைபெற்றன. இவ்வருடம் 7 வது உலககிண்ண சுற்றுப் போட்டி இங்கிலாந்து நாட்டில் நடைபெற உள்ளது. இதுவரை நடைபெற்ற ஆட்டங்களைப் பார்ப்போம்.

| ஆண்டு | நடைபெற்ற இடம் | World Champions |
|---|---|---|
| 1975 | England | West Indies |
| 1979 | England | West Indies |
| 1983 | England | India |
| 1987 | India/Srilanka | Australia |
| 1992 | Australia / Newzaland | Pakistan |
| 1996 | India/Pakistan/Srilanka | Srilanka |

**1975** முதலாவது போட்டி இங்கிலாந்து நாட்டில் நடைபெற்றது. Prudential World Cup என அழைக்கப்பட்டது. இறுதிப் போட்டியில் Australia வும் West Indies அணியும் மோதிக் கொண்டன.

West Indes (60) Overs, 8 Wickets 291 ஓட்டங்கள். இதில் Clive Lioyd 102 ஓட்டங்களை எடுத்தார்
Australia 58.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 274 ஓட்டங்கள்.
West Indies 17 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. Man of the Match :- Clive Lioyd (West Indies)

**1979** இரண்டாவது World Cup போட்டி இங்கிலாந்து நாட்டில் நடைபெற்றது. இதையும் Prudential 2nd World Cup என அழைக்கப்பட்டது. இறுதியாட்டம் இங்கிலாந்திற்கும் West Indies க்கும் இடையில் நடைபெற்றது.

West Indies 60 ஓவர்களுக்கு 9 விக்கெட் நஷ்டத்திற்கு 286 ஓட்டங்கள். இதில் Vivian Richards ஆட்டம் இழக்காமல் 138 ஓட்டங்கள் எடுத்தார்.
England 51 ஓவர்களுக்கு சகல விக்கெட்டுகளும் இழந்து 194 ஓட்டங்கள்.
West Indies 92 ஓட்டங்களால் வெற்றி ஈட்டியது. Man of the Match:- Vivian Richards

**1983** மூன்றாவது Word Cup போட்டி இங்கிலாந்தில் நடைபெற்றது. இதுவும் Prudential 3rd World Cup என அழைக்கப்பட்டது. இறுதியாட்டத்தில் இந்தியாவும் West Indies ம் மோதிக் கொண்டன.

India 54.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளும் இழந்து 183 ஓட்டங்கள். இதில் சிறீகாந் 38 ஓட்டங்களை எடுத்தார்.
West Indies 52 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 140 ஓட்டங்கள்.
India 43 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதில் அமரநாத் 26 ஓட்டங்களையும் 3 முக்கியமான விக்கெட்டுகளையும் எடுத்தமையால் Man of the Match விருது அமரநாத்திற்கு வழங்கப்பட்டது.

**1987** நான்காவது World Cup இந்தியாவும், இலங்கையும் கூட்டு சேர்ந்து நடத்தின. இது Reliance World Cup என பெயர் சூட்டப்பட்டது. இறுதியாட்டத்தில் Australiaவும் இங்கிலாந்தும் மோதிக் கொண்டன.

Australia 50 ஓவர்களுக்கு 5 விக்கெட் நஷ்டத்திற்கு 253 ஓட்டங்கள். Boon 75 ஓட்டங்களும், Mash 33 ஓட்டங்களும் எடுத்தனர்.
England 50 ஓவர்களுக்கு 8 விக்கெட் இழப்பிற்கு 246 ஓட்டங்கள். Alam Lamb 45, Mike Gatting 41, Athey 58 ஓட்டங்கள் எடுத்தனர்.
இதில் Australia 7 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. Man of the Match விருது Dc. Boon க்கு வழங்கப்பட்டது.



**1992** ஐந்தாவது World Cup Australiaவும் Newzealand ம் இணைந்து நடத்தின. இது Benson and Hedges World Cup என பெயர் சூடப்பட்டது. இறுதியாட்டத்தில் பாகிஸ்தானும், இங்கிலாந்தும் மோதிக் கொண்டன.

பாகிஸ்தான் 50 ஓவர்களும் 6 விக்கெட் இழப்பிற்கு 249 ஓட்டங்கள், இதில் Imran Khan 72, Miandad 58, Inzamam - UL - Hag 42 ஓட்டங்கள் எடுத்தனர்.
இங்கிலாந்து 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 227 ஓட்டங்கள். இதில் Fairbrother 62, Alan Lamb 31 ஓட்டங்களை பெற்றனர்.
பாகிஸ்தான் 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. Wasim Akram முக்கியமான 4 விக்கெட்டுகளை எடுத்து Man of the Match விருதைத் தட்டிச் சென்றார்.


நியூ ராஜன் சலூன்

உங்கள் அழகு கூந்தலை மேலும் அழகுபடுத்த நகரில் புதியதோர் நிறுவனம்
✂ பெரியவர்கள் - $9.00
✂ சிறுவர்கள் - $7.00
✂ வயது வந்தவர்களுக்கு விஷேட கழிவு
செவ்வாய் - ஞாயிறு வரை 10:30Am-8:00Pm
ராஜா - ✆ : (416) 741-1049
Pager (416) 739-2393
5010 Steeles Ave. W., #19, (Kipling/Steeles)





நகரின் மத்தியில் பெரியதோர் தமிழ் நிறுவனம்

செறண்டிப் (F) பிறஸ் மார்க்கட்

நாளாந்த பாவனைக்கு தேவையான சகல பொருட்களையும் நாளாந்தம் மலிவு விலைகளில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்





SERENDIB FRESH MARKET
Tel: (416) 269-9913
2631 Eglinton Ave. East, Scarborough, Ont. M1K 2S2



கலைமகள் புத்தக நிலையம்

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

595 PARLIAMENT ST. TORONTO, ONT. ☎: (416) 944-1818
3238 Eglinton Ave., East Scarborough, Ont. ☎: (416) 265-3605
3850 FINCH AVE. E. GO 1A SCARBOROUGH,ONT. ☎: (416) 292-9319
2580 Sheppard Ave. #9, Newin Centre Mall, Mississauga, Ont. ☎: (905) 306-0494


**1996** 6வது Wordd Cupஐ இலங்கை, பாகிஸ்தான், இந்தியா ஆகிய மூன்று நாடுகளு சேர்ந்து நடத்தின. இது Wills World Cup என பெயர் சூட்டப்பட்டது. இறுதிப் போட்டியில் ஸ்ரீலங்காவும் அவுஸ்ரேலியாவும் மோதிக்கொண்டன.

அவுஸ்திரேலியா:- 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 241 ஓட்டங்கள். இதில் Mark Taylor 75, Pointing 45, ஓட்டங்களும் எடுத்தனர்.
ஸ்ரீலங்கா:- 46.2 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 245 ஓட்டங்கள். இதில் அரவிந்த டி. சில்வா ஆட்டமிழக்காமல் 107, குருசிங்க 65, அர்ச்சுன ரணதுங்க ஆட்டமிழக்காமல் 47.
ஸ்ரீலங்கா 7 விக்கெட்டுக்களால் World Champion விருதை தட்டிச் சென்றது.
இதில் Man of the Match விருது அரவிந்த டி. சில்வாவுக்கு வழங்கப்பட்டது. முழு ஆட்ட தொடர் நாயகன் ஆக (Player of the Turnament) ஜெயசூரியாவுக்கு வழங்கப்பட்டது.

**1999** 7வது World Cup பிந்திய விபரத்தை இங்கு பார்ப்போம். May 14ம் திகதி முதல் ஆட்டத்தில் இங்கிலாந்தும், ஸ்ரீலங்காவும் மோத இருக்கின்றன. இறுதியாட்டம் இலண்டன் லோட்ஸ் (Lords) மைதானத்தில் ஜூன் 20ம் திகதி நடைபெறும்.

| Group - A | Group -B |
|---|---|
| Englnd | Australia |
| India | Bangaladesh |
| Kenya | Newzealand |
| South Affrica | Pakistan |
| Srilanka | Scotland |
| Ziambabwe | West Indies |

ஒவ்வொரு குறூப்பிலும் இருந்து வெற்றிபெறும் முதல் 3 நாடுகள் மொத்தமாக (6) நாடுகள் தலா இரண்டு ஆட்டங்கள் விகிதம் 9 ஆட்டங்கள் இரண்டவது சுற்றில் நடைபெறும். இதில இருந்து 4 நாடுகள் அரை இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்படும்.

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

-தொகுத்துத் தருபவர் - பரம்

### 1958

1. அன்பு எங்கே
2. அன்னையின் ஆணை
3. அதிசய திருடன்
4. அவன் அமரன்
5. இல்லறமே நல்லறம்
6. உத்தம புத்திரன்
7. எங்கள் குடும்பம் பெரிசு
8. ...ர்னியின் சபதம்
9. ...ன்வாங்கி கல்யாணம்
10. காத்தவராயன்
11. குடும்ப கௌரவம்
12. சபாஷ் மீனா
13. சம்பூர்ண ராமாயணம்
14. சாரங்கதாரா
15. செஞ்சுலஷ்மி
16. செங்கோட்டை சிங்கம்
17. திருமணம்
18. திருடர்கள் ஜாக்கிரதை
19. தேடிவந்த செல்வம்
20. தை பிறந்தால் வழி பிறக்கும்
21. நல்லஇடத்து சம்பந்தம்
22. நாடோடி மன்னன்
23. நான் வளர்த்த தங்கை
24. நீலாவுக்கு நெறஞ்ச மனசு
25. பதிபக்தி
26. பானை பிடித்தவள் பாக்கியசாலி
27. பிள்ளைக்கனியமுது
28. பூலோக ரம்பை
29. பெரிய கோவில்
30. பெற்ற மகனை விற்ற அன்னை
31. பொம்மைக் கல்யாணம்
32. மணமாலை
33. மனமுள்ள மறுதாரம்
34. மாலையிட்ட மங்கை
35. மாங்கல்ய பாக்யம்
36. மானமனிதன்
37. வஞ்சிக்கோட்டை வாலிபன்



'நாடோடி மன்னன்'- சரோஜாதேவியுடன்

இந்த இதழில் 1958ம் ஆண்டில் வெளிவந்த தமிழ சினிமாப்படங்களைப் பற்றிப் பார்ப்போம். மொத்தமாக 37 படங்கள் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது. சிவாஜியின் 8 படங்களும் 'உத்தம புத்திரன்', 'பதிபக்தி', 'சம்பூர்ண இராமாயணம்', 'பொம்மை கல்யாணம்', 'அன்னையின் ஆணை', 'சாரங்கதாரா', 'சபாஷ்மீனா', 'காத்தவராயன்' ஆகும்.

இந்த ஆண்டு எம்.ஜி. ஆர். நடித்து வெளிவந்த படம் ஒன்றே ஒன்று. 'நாடோடி மன்னன்'. இந்தப் படத்தில எம்.ஜி.ஆர் பல சாதனைகளைப் புரிந்துள்ளார். தானே டைரக்ஷன் செய்துள்ளார். மூன்று கதாநாயகிகளாக பானுமதி, சரோஜாதேவி, அஞ்சலி தேவி நடித்துள்ளார்கள். இடைவேளைக்கு பிற்பாடு முழுநீள கலர்படமாக வந்த படம்.

இதில் எம்.ஜி.ஆர். இரண்டு வேடத்தில் நடித்துள்ளார். மேலும் முக்கியமாக இந்த படத்தில் ...ஜி.ஆர். சொன்ன விஷயங்கள் தன் வாழ்வில் முதல்வராக வந்தபோது செய்து காட்டியுள்ளார். ... அவருடைய நீண்டகாலச் சிந்தனைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும். 'தூங்காதே தம்பி, தூங்காதே, நீ சோம்பேறி என்ற பெயர் வாங்காதே" என்ற மிக ஆழமான கருத்தை கொண்ட பாட்டையும் இந்தப் படத்தில் பார்த்து ரசிக்கலாம். இந்தப் படத்தை எம்.ஜி.ஆர். டைரக்ஷன செய்யும் போது பலர் கேலியாக எம்.ஜி.ஆர், நாடோடியாகவோ, மன்னனாகவோ வர இந்தப்படம் உறுதுணை செய்யும் எனக் கூறியுள்ளார்கள். அவர்கள் கூறியமாதிரி மன்னனாகவே மாறி விட்டார். 1952-08-29 ந் திகதி தென்னிந்தியாவில் உருவாக்கிய தென்னிந்திய துணை நடிகர் சங்கம், 1952-09-14 ந்திகதி தென்னிந்தியர் நடிகர் சங்கம் என பெயர் மாற்றப்பட்டதுடன், 1958ம் ஆண்டு தலைவராகவும் இருந்து செயல் ஆற்றியுள்ளார்.

இவ்வருடம் வந்த சிவாஜியின் எட்டுப்படங்களிலும் பல சிறப்புகள் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. சிவாஜியின் சம்பூர்ண ராமாயணம் 1958ல் சிவாஜிகணேசனிற்கு ஈடு இணையற்ற புகழைத் தேடிக் கொடுத்தது. சில நிமிஷங்கள் மட்டுமே வந்து போகும் சிவாஜியின் நடிப்பு பலரின் மனதைவிட்டு அகலாமல் இன்றும் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

'அன்னையின் ஆணை' இல் வரும் சிவாஜியின் "சாம்ராட் அசோகன்" என்ற ஓரங்க நாடகத்தில் சிவாஜியின் சிறப்பான நடிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. 'உத்தம புத்திரன்' சிவாஜி கணேசன் இரண்டு வேடமாக நடித்தது. இதில் வரும் மிகவும் பிரபலமான பாடல் "யாரடி நீ மோகனி". இப் பாட்டில் சிவாஜி நடித்து காட்டிய பல முறைகளை பிற்பாடு பல நடிகர்கள் தொடருகிறார்கள் என்பதனை இப்படம் பார்த்தவர்கள் அறிவார்கள்.

'காத்தவராயன்' நீண்ட படங்களில் இதுவும் ஒன்று. 'சபாஷ் மீனா' சிவாஜி முதன் முதலாக நடித்த முழுநீள நகைச்சுவைப்படம். சந்திரபாபுவின் புகழ்பெற்ற பாடலான "பம்பரக் கண்ணானே காதல்.... என்ன பாடலும் இப்படத்தில் உள்ளது. 'பதிபக்தி' சிவாஜி, ஜெமினி நடித்து வெள்ளிவிழா கண்ட படம். சிவாஜி கதாநாயகனாக இருந்தாலும், ஜெமினி கணேசனிற்கு முக்கிய பாத்திரமாகும். அப்பொழுது கதாநாயக அந்தஸ்த்து பார்க்காமல் சிவாஜி நடித்த படம்.

'மாலையிட்ட மங்கை', T.R. மகாலிங்கம் கதாநாயகனாக நடிக்க கவிஞர் கண்ணதாசன் கதைவசனம் தயாரிப்பு. இதில் "செந்தமிழ் தேன்மொழியாள், நிலாவென சிரிக்கும் ... என T.R. மகாலிங்கத்தின் பிரசித்தியான பாடல் உள்ள வெற்றி பெற்ற படமாகும்.
...ஞ்சிக்கோட்டை வாலிபன்' ஜெமினி அதிபர் வாசனின் வெற்றிப்படம். இரு கதாநாயகிகள் ...வஜந்திமாலா, பத்மினி. இதில் ஒரு போட்டி நடனம் வருகிறது. இதில் இரு கதாநாயகிகளும் சிறந்த முறையில் நடனம் ஆடி யார் வெற்றி பெற்றதென்பதைக் காட்டாமல் நடனத்தை முடித்துள்ளார்கள்.
இவ்வருடம் சினிமா ரசிகர்கள் சங்கத்தால் சிவாஜி சிறந்த நடிகராகவும், 'உத்தம புத்திரன்' சிறந்த படமாகவும், நகைச்சுவை நடிகராக தங்கவேலுவும் தெரிவு செய்யப்பட்டனர்.


**SNR OPTICAL**

அனைத்து டிசைனர் பிறேம்ஸ் மற்றும் கண்ணாடிகள் (Designer Frames & Sunglasses) மேலும் சகல திருத்த வேலைகள் சிறந்தமுறையில் அனுபவமிக்கவரால் செய்துகொள்ள தொடர்புகொள்ளவும். *அரசாங்க உதவியில் உள்ளவர்கள், மற்றும் அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

* 60 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு சில வசதிகளுமுண்டு.

ரதி - FRAME CONSULTANT (Robert Optician)

☎: (416) 332 9995


## நான் வாழப் போகிறேன்

**சுவடு 28**

-வீணை மைந்தன்



சிவாஜியின் கதாநாயகிகள்.....

**விமலா:** ஆம் உன் கண்ணைத் திறந்தவள் அவள் தான். நீ ஏழையாக ஆக்கப்படா விட்டால் ஏழை உலகை நினைத்துக் கூட இருக்க மாட்டாய். அப்படி ஒரு உலகம் இருப்பதாகவே உனக்குத் தெரிந்திருக்காது. உன் உலகம் உல்லாச புரியாக இருந்திருக்கும். மாளிகையிலே வீசும் தென்றலை அனுபவிப்பாய் குடிசையிலே குமுறும் புயலைக் காணமாட்டாய். சமுதாயக் கோணல்களை வெறுக்கக் கற்றிருக்கிறாய். ஆனால் எரிமலையை தண்ணீர் ஊற்றி அணைக்கப் பார்க்கிறாய். மலைப்பாம்பை அடக்க மகுடி ஊதுகிறாய். சமுதாயப் புரட்சி ஆலகால விருச்சத்தின் கிளையை வெட்டுவதல்ல.. அதன் ஆணிவேரையே பெயர்ப்பதுதான். வெட்கப்படு. நீ மேற் கொண்ட வேலைகளுக்கு வேதனை தீர்க்கும் மார்க்கம் நீ போட்ட வேஷங்கள் அல்ல. அதற்காக மட்டும் இருந்திருக்கக் கூடாது. அவதிப்படும் ஆயிரமாயிரம் தங்கை களுக்காக இருந்திருக்க வேண்டும். அதற்காக வெட்கப்படு... வேதனைப்படு.... விகாரப்படு....

**குணசேகரன்:-** போதும்... போதும்...

**விமலா:-** மன்னித்துக் கொள் உன் மனதைப் புண்படுத்தி விட்டேன். பாலைவனத்தைப் பூஞ்சோலையாக்கப் புதிய பாதை காணவேண்டும். உன்னைப் போல் மண்ணை வாரி இறைத்துப் பயனில்லை.

**குணசேகரன்:** ஆமாம் உலகப் புத்தகத்தின் அநுபவ ஏடுகளை இப்படி புரட்டுகிறாயே இதற்கெல்லாம் ஆசிரியர் யார்...?

**விமலா:** எல்லாம் "அண்ணா" தான்.....

**குணசேகரன்:** அண்ணா வா....! அண்ணாவா... என்று பராசக்தி படத்தில் தனது முதல் திரைக்காவியமான முதல் கதாநாயகி விமலாவாக நடித்த பண்டரிபாயைப் பார்த்து ஆச்சரியத்துடன் விழிப்பார் சிவாஜி அவர்கள் கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவைக் குறிக்கக் கூடியதாக திரைக் கதையில் வரும் பண்டரிபாயின் அண்ணனுக் கூடாக இந்த உரையாடல் சித்திரத்தைக் தீட்டியிருந்தார். இது கலைஞருக்கே உரிய கைவந்த கலையாகும்.

பராசக்தி திரைப்படத்தில் இக்காட்சியைத் தொடர்ந்து... கனவில் ஒரு காதல் காட்சியைப் படமாக்கியிருப்பார்கள். கதாநாயகன் குணசேகரனும் (சிவாஜி) கதாநாயகி விமாலா (பண்டரிபாய்) யும் இடம் பெறும் இக் காதல் கனவுப் பாடலாக அமைந்ததே புகழ் பெற்ற... "புதுப் பெண்ணின் மனதைத் தொட்டுப் போனவரே உங்க எண்ணத்தைச் சொல்லிவிட்டுப் போங்க..." எனும் இனிமையான பாடலாகும்.

சிவாஜிக்கு நிகராக தமிழ் வசனங்களை மிக அழுத்தம் திருத்தமாகவும் டைம்மிங் தவறாமலும் உணர்ச்சி பாவத்துடன் பேசி நடிக்கும் ஆற்றல் மிக்கவர்களுள் பண்டரிபாய் மிக முக்கியமானவர். சிவாஜியின் முதலாவது கதாநாயகி என்ற பெருமைக்குரியவரது அடுத்தபடமும் அதாவது சிவாஜியுடன் இணைந்து புகழ்பெற்றது 'திரும்பிப் பார்' படமாகும். இப் படத்தில் பரந்தாமன் எனும் அன்ரிஹீரோ வேடம் சிவாஜி ஏற்று நடித்தது. பண்டரிபாய் சிவாஜியின் சகோதரியாகும்.

இப்படமும் கலைஞரின் பேனா முனையிலிருந்து கிளம்பிய தீப்பொறிகளால் புரட்சிக் காவியமானது. 'பரந்தாமா...! திரும்பிப் பார்...! இங்கேயல்ல நீ நடந்து வந்த பாதையிலே.... என்று சகோதரியாக நடித்த பண்டரிபாயின் மின்சார வசன உச்சரிப்புகள் பிரமிக்கத் தக்கவையாகும்... இதேபோன்று 1954ல் வீணைவித்துவான் புதுமை இயக்குநர் எஸ். பாலசந்தர் இயக்கி ஏ.வி.எம். தயாரிப்பாக வெளிவந்த 'அந்த நாள்' இன்றும் கூடப் பேசப்படும் பேசும் படமாகும். கதைக்கரு அன்டிசென்டிமென் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது. பாடல்கள் இல்லாமலே தயாரிக்கப்பட்ட புதுமையான தயாரிப்பு தாய் நாட்டின் இராணுவ இரகசியங்களை எதிரி நாட்டுக்குக் காட்டிக் கொடுக்கும் உளவாளியாக சிவாஜி வேடமேற்றிருந்தார். கதாநாயகன் என்ற இமேஜ் துரோகச் செயல்களில் ஈடுபடும் பாத்திரத்தினால் பாதிக்கப்படும் என்று துளியளவும் பயப்படாமல் சிவாஜி தனது நடிப்பிலும் திறமையிலும் வைத்திருந்த துணிச்சல் மிக்க நம்பிக்கைக்கு உதாரணமாக இப்படத்தைக் கூறலாம். தேசத்துரோகி (சிவாஜியை) யான கணவனையே (மனைவி) பண்டரிபாய் சுட்டுக் கொன்ற புரட்சிப் பாத்திரத்தை கதாநாயகியான பண்டரிபாய் இதில் ஏற்று நடித்து சிவாஜியின் திரைக் கதாநாயகிகளில் வித்தியாசமானவராக விளங்கினார்... தொடர்ந்தும் சில படங்களில் நடித்தார். 'அவள் யார்' 'தங்கப் பதக்கம்' போன்ற படங்கள் குறிப்பிடத் தக்கவையாகும்.

நடிகர் திலகத்தின் கதாநாயகிகள் யாவரும் திறமை படைத்தவர்கள் சிவாஜியிடமிருந்து கற்றுக் கொள்ள விரும்புபவர்கள். பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவதைப் போன்று சிவாஜிக்கு நிகராக நடித்துப் புகழ் பெற்றவர்கள் பலரின் மத்தியிலே "இந்த 'அம்மா'வுடன் எனக்கு நடிக்க வாய்ப்பு வராதா' என்று ஏங்கியவர் சிவாஜி என்று பலருக்குத் தெரியாது.

பின்னாளில் அந்த நடிகையையே ஓரம் கட்டச் செய்யுமளவிற்கு (திரையில்) முத்திரை பதித்தவர் நமது நடிகர் திலகம். அந்த நடிகை மதிப்பிற்குரிய பத்மஸ்ரீ டாகடர் பானுமதி ஆவார். நடிகர் திலகம் பற்றிக் கூறும் போது... "சிவாஜி கணேசனும்" "எம்.ஜி..ஆ"ரும் பெரிய கலைஞர்கள். எம்.ஜி. ஆரோட "அழகான பொண்ணு தான்" பாட்டு (அலிபாபாவும் நாற்பது திருடர்களும் திரைப்படம்) பண்ணிக்கிட்டிருக்கும் போது தான் சிவாஜி செட்டுக்கு வந்தார். அப்ப என் நடிப்பைப் பார்த்து "ஐயோ! அந்தப் பொண்ணோட ஒரு ரோலாவது பண்ணனும் னு" சொல்லிக்கிட்டிருந்தார். கேமிராமேன் வந்து உங்க கூட சிவாஜி சார் ஆக்ட் பண்ண ஏங்கறாருண்ணார். அப்படித்தான் முதன் முதல் அறிமுகம் ஆச்சு. நடிகர் திலகத்தின் அந்த ஆசை 1955 ல் நிறைவேறிற்று. "நடிப்புக்கு இலக்கணம் வகுக்கும் நடிகை என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட பிரபல நடிகை பி. பானுமதி அவர்களுடன் பேராசிரியர். அமரர் கல்கி எழுதிய 'கள்வனின் காதலி' நாவல் படமாக்கப்பட்டிபோது முதன்முதல் சோடி சேர்ந்தார்கள். சிவாஜிக்கு இப்படத்தில் திருடன் வேடம்.

அதைத் தொடர்ந்து அறிஞர் அண்ணாவின் கதைக்கு கலைஞர் மு.க. வசனம் எழுத பானுமதியுடன் "ரங்கூன் ராதா" வில் இணைந்தார். பானுமதிக்கும் சிவாஜிக்கும் நடந்த நடிப்புப் போட்டிக்கு உதாரணமாக இக் காவியத்தைக் குறிப்பிடுவார்கள் திரைப்பிரியர்கள். 1957ல் பானுமதியுடன் இணைந்த இன்னுமொரு வித்தியாசமான நடிப்பு உரையாடலைக் கொண்ட படம் கலைஞர் அமரர் ஏ.பி. நாகராஜன் கதை வசனம் எழுதி இயக்கிய கொங்கு நாட்டு தமிழ் மணக்கும் "மக்களைப் பெற்ற மகராசி" தமிழகம் பாராட்டிய அசல் கொங்கு நாட்டு விவசாயியாக சிவாஜி ஏற்ற வேடம் அவரை எங்கோ அழைத்துச் சென்றது. அதே 57ல் பானுமதியுடன் காதல் காவியமான "அம்பிகாபதியிலும்" "ராணி லலிதாங்கி" "மணமகன் தேவை" ஆகிய சித்திரங்களில் இருவரும் இணைந்தார்கள். டாக்டர் பானுமதியுடன் இணைந்து நடித்த இறுதிப் படமாக 1965 வெளியானது நகைச்சுவைக்குடும்பச் சித்திரமான 'அறிவாளி' ஆகும்.

*-கதாநாயகிகள் தொடர்கிறார்கள்.....*

# MANCHULAA FASHION

## 7th ANNIVERSARY GRAND SALE

| | நடைமுறை விலை | நம்பமுடியாத மலிவு விலை |
|---|---|---|
| England London Skirt | 15.00 | 5.99 |
| England London Shirt | 25.00 | 14.99 |
| England Skirt & Blouse | 65.00 | 39.99 |
| England Newborn Dress | 25.00 | 14.99 |
| England Ladies Dress | 50.00 | 29.99 |
| England Pants | 50.00 | 29.99 |
| England Man Shirt | 25.00 | 14.99 |
| Man T. Shirt New Design | 25.00 | 14.99 |
| Boys Shirt | 15.00 | 9.99 |

## இலவசம்! FREE!

| | |
|---|---|
| 1 பனாரஸ் சாறி வாங்கினால் | 1 பிளவுஸ் |
| 5 பெல்கம் சாறி வாங்கினால் | 1 சாறி |
| 6 நைலெக்ஸ் சாறி வாங்கினால் | 1 சாறி |
| 10 இந்தோனேசியா கவுண் வாங்கினால் | 1 பற்றிக் கவுண் |
| 5 பஞ்சாபி சூட் வாங்கினால் | 1 சிறுமிக்கான பஞ்சாபி சூட் |
| 10 சாப்பாட்டுத்தட்டு வாங்கினால் | 1 தட்டு |
| $150 டொலர்களுக்கு மேல் எவர் சில்வர் பொருட்கள் வாங்கினால் | 1கேக் அவுண் |


இ
ல
வ
ச
ம்

**நீங்களும் அதிஷ்டசாலியாகுங்கள்!**

இவ் மலிவு விலையில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு அதிர்ஷ்டசாலியாகும் வாடிக்கையாளர்கள் மூவருக்கு பரிசு வழங்கப்படும்.

1வது பரிசு பனாரஸ் சேலை
2வது பரிசு மைசூர் சில்க்
3வது பரிசு கேக் தயாரிக்கும் அவுண்

**MANCHULAA FASHION**
**5818 SHEPPARD AVE. E., UNIT 203, SCARBOROUGH, ONTARIO**




**Tel: (416) 297-9875**

மலிவு விலையில் மாபெரும் சாதனை படைத்த
மஞ்சுளா பஷனின் 6வது ஆண்டு நிறைவு
விழாவையும் 7வது ஆண்டு பிறந்த தின விழாவையும் முன்னிட்டு
**கனடா மாநகரம் இதுவரை கண்டிராத நேர்மையான**

# மாபெரும் மலிவு விற்பனை

# மஞ்சுளா பஷன்

மார்ச் 19ம் திகதி முதல் ஏப்ரல் 12ம் திகதி வரை

**FROM MARCH 19**

**To APRIL 12**



சாரம் தைத்தது
இடுப்புச்சங்கிலி
சாறி பிளவுஸ்
காமாட்சி விளக்கு
சாறி உள்பாவாடை
~~$10.00~~
**$4.99**
மட்டுமே

லைனிங் துணி
~~$3.00~~ 1யார்
**$0.99**
மட்டுமே

இந்தோனேசியா
பற்றிக்கவுண்
~~$15.00~~
**$7.99**
மட்டுமே

எவர் சில்வர் பேணி
~~$2.00~~
**49¢**
மட்டுமே

மஞ்சுளா பஷனின் விலையைவிடக் குறைவாக வேறு எங்காவது கொள்வனவு செய்தால் பணம் மீளளிக்கப்படும்.

**பொருட்களின் விலை விபரம் உள்ளே . . .**

**... ஆயிரத்திற்கு மேற்பட்ட எவர் சில்வர் பொருட்கள் இந்தியாவில் விற்கும் விலையைவிடக் குறைந்த விலையில்**

| | நடைமுறை விலை | நம்பமுடியாத மலிவு விலை |
|---|---|---|
| கறி சமைக்கும் சட்டி . 10Pcs | $125.00 | $74.99 |
| கறி சமைக்கும் சட்டி 8Pcs | $70.00 | $34.99 |
| நிறைகுடம் ...... Set 9Pcs | $35.00 | $24.99 |
| ஸ்ரீமர் ........ Steamer . 3pcs | $25.00 | $14.99 |
| இட்லி பானை .... Small | $25.00 | $ 9.99 |
| இட்லி பானை .... Medium | $30.00 | $21.99 |
| இட்லி பானை .... Large | $35.00 | $24.99 |
| காமாட்சி விளக்கு ... Brass | $10.99 | $ 4.99 |
| சாப்பாட்டுத் தட்டு | $ 4.00 | $ 1.99 |
| கறிக்கிண்ணம் ... 24 துண்டுகள் | $75.00 | $49.99 |
| கறிக்கிண்ணம் ... 12 துண்டுகள் | $30.00 | $19.99 |
| கறிக்கிண்ணம .... 10 துண்டுகள் | $30.00 | $19.99 |
| அப்பச்சட்டி மூடியுடன் 2pcs | $25.00 | $11.99 |
| பலகார அச்சு .... 15 சில்லுடன் | $25.00 | $14.99 |
| அடுப்பு வளையம் | $ 4.00 | $ 1.99 |
| கறிசமைக்கும் சட்டி . 2pcs | $25.00 | $12.99 |
| கறிசமைக்கும் சட்டி Copper | $30.00 | $14.99 |
| தாச்சி ........ 2pcs Copper பூசியது | $30.00 | $14.99 |
| Ice cream set ..... 13pcs | $25.00 | $16.99 |
| Ice cream cup | $ 3.00 | $ 1.49 |
| Welcome set 3pcs | $20.00 | $ 9.99 |
| கறிக்கிண்ணம் 6 துண்டுகள் | $20.00 | $11.99 |
| புட்டுப்பானை பெரியது | $15.00 | $ 7.99 |
| ஐயப்பன் குத்துவிளக்கு | $ 5.00 | $ 2.99 |
| பொங்கல் பானை | $30.00 | $19.99 |
| தசாங்கம் | $ 2.00 | $ 0.99 |
| எவர் சில்வர் பேணி | $ 2.00 | $ 0.49 |
| கரண்டி வகைகள் | 49 சதம் மட்டும் | |



**4' Brass குத்துவிளக்கு $399.99**

ஆடம்பர பொருட்கள்,
இமிற்றேசன நகைகள்,
விளையாட்டுப் பொருட்கள்,
கலைப்பொருட்கள்,
சாமிபடங்கள், பட்டுகள்
இன்னும் எண்ணிடலங்காப்
பொருட்கள் மிக மிக மலிவு விலையில் **50% கழிவு விலையில்**

**நாகரீகத்தின் பிறப்பிடம் மஞ்சுளா பஷன்**

| | நடைமுறை விலை | நம்பமுடியாத மலிவு விலை |
|---|---|---|
| டயானா சாறி | $40.00 | $24.00 |
| பட்டுவேட்டி சால்வையுடன் | 35.00 | 24.99 |
| சாரம் தைத்தது | 10.00 | 4.99 |
| லைனிங் துணி 1யார் | 3.00 | 0.99 |
| பிளவுஸ் துணி | 6.00 | 3.24 |
| கொட்டன் வேட்டி | 20.00 | 9.99 |
| சாறி உள்பாவாடை | 10.00 | 4.99 |
| முடிமயிர் | 8.00 | 3.99 |
| Sofa cover | 35.00 | 24.99 |
| Bed cover 2 தலையணை உறையுடன் | 35.00 | 24.99 |
| தூய காஞ்சிபுரம் | 125.00 | 74.99 |
| மைசூர் சில்க் | 100.00 | 49.99 |
| பனாரஸ் | 250.00 | 124.99 |
| கோலம், ரங்கோலி, அபூர்வா | 200.00 | 99.99 |
| அம்பர் ரெறின், கோடம்பாக்கம் | 30.00 | 20.00 |
| மொனிக்கா | 30.00 | 19.99 |
| நைலெக்ஸ் சாறி | 25.00 | 14.99 |
| காதல் மன்னன் | 30.00 | 19.99 |
| காஷ்மீர் சாறி | 35.00 | 24.99 |
| மும்தாஸ் + தாஜ்மகால் சாறி | 30.00 | 19.99 |
| பெல்கம் சாறி | 25.00 | 14.99 |
| பாவாடைத் தாவணி தைத்தது | 30.00 | 19.99 |
| கற்பிணிகளுக்கான உடைகள் | 25.00 | 14.99 |
| இந்தோனேசியா பற்றிக்கவுண் | 15.00 | 7.99 |
| ரம்பா, நக்மா சூட் | 75.00 | 34.99 |
| சாறிக்குஞ்சம் | 8.00 | 3.99 |
| பஞ்சாபி சூட் (Children) | 25.00 | 14.99 |
| பஞ்சாபி சூட் | 45.00 | 24.99 |
| இடுப்புச் சங்கிலி | 10.00 | 4.99 |
| சாறிபிளவுஸ் | 10.00 | 4.99 |

இன்னும் பல பல

பூவேலி, படையப்பா, சார்லினி சூட், நக்மா,
சிம்ரான் இவ்வாறாக
1999ம் ஆண்டிற்கான புதிய
பஞ்சாபி சூட்டுக்கள் பம்பாயிலிருந்து
நேரடித் தெரிவுகளில்

**மலிவின் மறுபெயர் மஞ்சுளா பஷன்**

☼ சூரியக்குடும்பம் 6

# விண்வெளி

தருபவர் - கனி

சென்ற தடவையில் சூரியக்குடும்பத்தின் பிரதான அங்கத்தவர்களைப் பற்றிப பார்த்தோம். இவர்கள் எந்த எந்த அளவுகளில் எவ்வெவ் விடங்களில் இருக்கின்றார்கள என ஒப்பீட்டு அடிப்படையில் பார்ப்போம். இந்த ஒப்பீட்டு அளவைக்கு முதலில் பூமியையே எடுப்போம். நமது பூமி சராசரியாக 12,756 km விட்டமுடைய ஒரு மிகப பெரிய பந்தாகும். இப் பெரிய பூமியை மேசை உப்பின் ஒரு மணியளவு சிறியதாக கருதுவோமாயின் நமது சந்திரன் 1 cm தூரத்தில் ஒரு மிளகுத் தூளின் பருமனில் காணப்படும். சுமார் 15 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள (பூமியில் இருந்து) சூரியனானது 4 மீற்றர் தூரத்தில் இருக்கும் சிறிய கொடி முந்திரிப் பழத்தின் பருமனில் இருக்கும். சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் புதனும் வெள்ளியும், சூரியனில் இருந்து பூமிக்கு அப்பால் செவ்வாயும் மேசை உப்பின் மணிகளாகக் காணப்படும். சூரி[illegible] இருந்து 20 மீற்றர் தூரத்தில் அப்பிள் விதையின் பருமனில் வியாழனும அதற்கு அப்பால் 36 மீற்றர் தூரத்தில் சிறிய ஒரு அப்பிள் விதையின் பருமனில் சனியும் காணப்படும். இன்னமும் போகப் போக சராசரி மேசை உப்பின மணியைவிடச் சற்றுப் பெரிய உருவில் யூரனசும், நெப்ரியூனும் சூரியனில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் கிட்டத்தட்ட நமது சந்திரனின் பருமனில் காணப்படும். புளூட்டோவிற்கு இடையில் காணப்படும். இதுவே ஓரளவுக்கு தெளிவான எமது சூரியக் குடும்பத்தின மிகமிக உருச் சிறுக்கப்பட்ட அமைப்பாகும். ஆனாலும் புளூட்டோவுக்கு அப்பால இன்னமும் நீண்டு கொண்டு போய் மிகத் தொலைவில் பல்லாயிரக் கணக்கான சிறிய திடப் பொருட்கள் காணப்படுகின்றன. சூரியக் காற்றினால் தள்ளுண்டு போன இச் சிறிய பொருட்கள் சூரியனில் இருந்து மிக மிகப் பெரிய தொலைவில் சூரியனை வலம் வருகின்றன. இப்பொருட்களிடையே தான் வால்வெள்ளிகள் காணப்படுகின்றன. ஏராளமான விண்கற்களும் காணப்படுகின்றன.

